## 2.143 கிராம ஊராட்சிகள் – வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருக்கவும் / பழுதுபார்க்கவும் மற்றும் பராமரிப்பு செய்யவும் அதிகாரம்

ஊரக வளர்ச்சி (இ4) துறை

அரசாணை (நிலை) எண். 228 நாள் : 30.8.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 2337, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 28.8.61
2. அரசாணை (நிலை) எண்.732, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 7.9.90
3. அரசாணை (நிலை) எண்.205, ஊரக வளர்ச்சித் துறை , நாள் 13.12.95
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதங்கள் எண். 91508/98,ஆர்.சி.பி–2 நாள் 17.3.99, 12.7.99, 26.11.99, 24.12.99, 7.2.2000 மற்றும் 24.2.2000
5. அரசாணை (2டி) எண். 149, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 9.7.99
6. அரசாணை (நிலை) எண்.125, ஊரக வளர்ச்சி (தி3) துறை, நாள் 16.5.2000

**ஆணை**

பொதுப்பணித் துறையால் உருவாக்கப்பட்ட சமுதாய கேட்பு திட்டத்தின் (Community Listening Scheme) கீழ், 1947 முதல் 1961 வரை, 5000 சமுதாய வானொலி பெட்டிகள் நிறுவப்பட்டு, அரசால் பராமரிக்கப்பட்டு வந்தன. 1961ல் ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தபட்சம் ஒரு சமுதாய வானொலிப் பெட்டியாவது நிறுவ வேண்டும் எனும் நோக்கில், இதற்கென ஊராட்சி வானொலி பராமரிப்பு நிறுவனம் அமைக்க படிக்கப்பட்ட அரசாணை 1–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் சமுதாய வானொலிப் பெட்டிகள் எண்ணிக்கை சீராக உயர்ந்து, கிட்டத்தட்ட 44,000 சமுதாய வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டன. அதன் பின்னர் 5000–க்கும் மேலான சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகள் முதலில் நிறுவப்பட்டன. வானொலி பெட்டிகளுடன், தொலைக்காட்சிப் பெட்டிகள் பராமரிப்புப் பணியையும் மேற்கொண்டு வந்ததால், நிறுவனத்தின் பெயர் 1970ல், ‘‘தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனம்’’ என மாற்றியமைக்கப்பட்டது. 1995ல், 45,302 புதிய சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவ அரசு ஆணை பிறப்பித்தது.

2. தமிழகத்தில் தற்போது 12,619 கிராம ஊராட்சிகளில், 58,186 தொலைக்காட்சிப் பெட்டிகளும், 8267 வானொலிப் பெட்டிகளும் உள்ளன. 1.4.2000 வரை பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள் மூலமாக 22,053 தொலைக்காட்சி அறைகள் கட்டப்பட்டுள்ளன. கிராம ஊராட்சிகளின் பணியமைப்பை அவைகளின் நிதிநிலைக்கேற்ப சீரமைப்பது குறித்து ஆய்வு செய்ய படிக்கப்பட்ட அரசாணை 5–ல் ஊரக வளர்ச்சி இயக்குநர் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், ஏற்கனவே வானொலி/தொலைக்காட்சிப் பெட்டிகளை இயக்கும் பணியை கிராம ஊராட்சிகளில், உள்ளூரில் உள்ள தன்னார்வத் தொண்டர்கள், மகளிர் மன்றங்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மூலம் செய்ய வேண்டுமென்றும், இதற்கென பணியாளர்களை தனியாக நியமனம் செய்வதோ, செலவினம் ஏதும் மேற்கொள்வதோ கூடாது என்றும், படிக்கப்பட்ட அரசாணை 6–ல் அரசு ஆணையிட்டுள்ளது.

3. ஊராட்சி அமைப்பு மூன்றடுக்கு முறையில் உருவாக்கப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் வலுவாக்கப்பட்ட நிலையில், நமக்கு நாமே போன்ற வளர்ச்சித் திட்டங்களில் மக்கள் தங்களின் பங்கினை ஆற்ற ஆர்வமுடன் முன் வரும் இந்நாட்களில், கிராம ஊராட்சிகளிடமே வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளை கிராம ஊராட்சித் தலைவர்கள் கண்காணிப்பில், ஒப்படைப்பதும், வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளை இயக்குவதற்கும், பழுதுபார்ப்பதற்கும், கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கலாம் எனவும் அரசு முடிவெடுத்துள்ளது.

4. கிராம ஊராட்சிகளுக்கு கீழ்க்காணும் அதிகாரங்களை ஒப்படைத்து, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது:–

அ) அந்தந்த கிராம ஊராட்சிகள் அவற்றிற்குரிய வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருத்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆ) தற்போதைய நடைமுறையில் உள்ள வழிமுறைகளைப் பின்பற்றி, ஊராட்சிகளுக்குள்ளேயே அவைகளை பழுது பார்த்துக்கொள்ளும் பணியை மேற்கொள்ள வேண்டும்.

இ) பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பிற்காகும் செலவினங்களை, கிராம ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

ஈ) இதற்கென தனியே பணியாளர்களை ஈடுபடுத்தாது, தற்போதைய நடைமுறைகளின்படி, வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளை இயக்குவது கிராம ஊராட்சிகளின் பொறுப்பாகும்.

5. இந்த அரசாணை அ.சா.கு.எண். 64753/ஊ.வ./2000, நாள் 28.8.2000–ல் நிதித்துறையிடமிருந்து பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்